# பெப்ரவரி – 12 – செவ்வாய்

**புனித வால்பர்கா**

**“உங்கள் மரபை நிலைநாட்டக் கடவுளின் கட்டளைகளை வெகு திறமையாகப் புறக்கணித்து விட்டீர்கள்”.**
*மாற். 7:9*

## முதல் வாசகம் : தொடக்க நூல் 1 : 20 ---2 : 4

அப்பொழுது கடவுள், ”திரளான உயிரினங்களைத் தண்ணீர் தோற்றுவிப்பதாக! விண்ணுலக வானத்தில் நிலத்திற்கு மேலே பறவைகள் பறப்பனவாக!” என்றார். இவ்வாறு, கடலின் பெரும் பாம்புகளையும், திரள் திரளாக நீரில் நீந்திவாழும் உயிரினங் களையும், இறக்கையுள்ள எல்லாவிதப் பறவைகளையும் அவ்வவற்றின் இனத்தின்படி கடவுள் படைத்தார். கடவுள் அது நல்லது என்று கண்டார். கடவுள் அவற்றிற்கு ஆசி வழங்கி ”பலுகிப் பெருகிக் கடல் நீரை நிரப்புங்கள். பறவைகளும் மண்ணுலகில் பெருகட்டும்” என்றுரைத்தார். மாலையும் காலையும் நிறைவுற்று, ஐந்தாம் நாள் முடிந்தது. அப்பொழுது கடவுள், ”கால்நடைகள், ஊர்வன, காட்டுவிலங்குகள் ஆகியவற்றை அவ்வவற்றின் இனத்தின்படி நிலம் தோற்றுவிப்பதாக” என்றார். கடவுள் காட்டு விலங்குகளையும் கால்நடைகளையும் நிலத்தில் ஊர்வன யாவற்றையும் அவ்வவற்றின் இனத்தின்படி உருவாக்கினார். கடவுள் அது நல்லது என்று கண்டார். அப்பொழுது கடவுள், ”மானிடரை நம் உருவிலும், நம் சாயலிலும் உண்டாக்குவோம். அவர்கள் கடல் மீன்களையும், வானத்துப் பறவைகளையும், கால்நடைகளையும், மண்ணுலகு முழுவதையும், நிலத்தில் ஊர்வன யாவற்றையும் ஆளட்டும்” என்றார். கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார் கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார் ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார். கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கி, ”பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள் அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள் கடல் மீன்கள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்ந்து உயிர் வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள்” என்றார். அப்பொழுது கடவுள், ”மண்ணுலகெங்கும் உள்ள விதை தரும் செடிகள், பழமரங்கள், அனைத்தையும் உங்களுக்கு நான் கொடுத்துள்ளேன் இவை உங்களுக்கு உணவாகட்டும். எல்லாக் காட்டுவிலங்குகள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்வன ஆகிய அனைத்து உயிரினங்களுக்கும் பசுமையான செடிகள் அனைத்தையும் நான் உணவாகத் தந்துள்ளேன்” என்றார். அது அவ்வாறே ஆயிற்று. கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன. மாலையும் காலையும் நிறைவுற்று ஆறாம் நாள் முடிந்தது. விண்ணுலகும் மண்ணுலகும் அவற்றில் உள்ள அமைப்புகள் அனைத்தும் உருவாக்கப் பெற்று நிறைவெய்தின. மேலும் கடவுள் தாம் செய்த வேலையை ஏழாம் நாளில் முடித்திருந்தார். அவர் தாம் செய்த வேலைகள் அனைத்தையும் நிறைவு பெறச்செய்து, ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். கடவுள் ஏழாம் நாளுக்கு ஆசி வழங்கி, அதைப் புனிதப்படுத்தினார். ஏனெனில் கடவுள் நாம் செய்த படைப்பு வேலைகள் அனைத்தையும் நிறைவு பெறச் செய்து அந்நாளில்தான் ஓய்ந்திருந்தார். இவையே விண்ணுலக, மண்ணுலகப் படைப்பின் தோற்ற முறைமையாம்.

**பதில்பாடல்:** ஆண்டவரே உமது பெயர் உலகெங்கும் மேன்மையாய் விளங்குகிறது.

## நற்செய்தி : மாற்கு 7 : 1 - 13

அக்காலத்தில், ஒருநாள் பரிசேயரும் எருசலேமிலிருந்து வந்திருந்த மறைநூல் அறிஞர் சிலரும் அவரிடம் வந்து கூடினர். அவருடைய சீடருள் சிலர் தீட்டான, அதாவது, கழுவாத கைகளால் உண்பதை அவர்கள் கண்டார்கள். பரிசேயரும், ஏன் யூதர் அனைவருமே, தம் மூதாதையர் மரபைப் பின்பற்றிக் கைகளை முறைப்படி கழுவாமல் உண்பதில்லை. சந்தையிலிருந்து வாங்கியவற்றைக் கழுவிய பின்னரே உண்பர். அவ்வாறே கிண்ணங்கள், பரணிகள், செம்புகள் ஆகியவற்றைக் கழுவுதல் போன்று அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய மரபுகள் இன்னும் பல இருந்தன. ஆகவே பரிசேயரும் மறைநூல் அறிஞரும் அவரை நோக்கி, ”உம் சீடர் மூதாதையர் மரபுப்படி நடவாமல் தீட்டான கைகளால் உணவு அருந்துவதேன்?” என்று கேட்டனர். அதற்கு அவர், ”வெளிவேடக்காரர்களாகிய உங்களைப்பற்றி எசாயா பொருத்தமாக இறைவாக்கு உரைத்திருக்கிறார். ”இம்மக்கள் உதட்டினால் என்னைப் போற்றுகின்றனர் இவர்கள் உள்ளமோ என்னை விட்டு வெகு தொலையில் இருக்கிறது. மனிதக் கட்டளைகளைக் கோட்பாடுகளாகக் கற்பிக்கின்றனர். இவர்கள் என்னை வழிபடுவது வீண்” என்று அவர் எழுதியுள்ளார். நீங்கள் கடவுளின் கட்டளைகளைக் கைவிட்டு மனித மரபைப் பின்பற்றி வருகிறவர்கள்” என்று அவர்களிடம் கூறினார். மேலும் அவர், ”உங்கள் மரபை நிலைநாட்டக் கடவுளின் கட்டளைகளை வெகு திறமையாகப் புறக்கணித்து விட்டீர்கள். ”உன் தந்தையையும் தாயையும் மதித்துநட” என்றும் தந்தையையோ தாயையோ சபிப்போர் கொல்லப்படவேண்டும்” என்றும் மோசே உரைத்திருக்கிறார் அல்லவா! ஆனால் ஒருவர் தம் தாயையோ தந்தையையோ பார்த்து, ”நான் உமக்குத் தரக் கடமைப்பட்டிருக்கிறது ”கொர்பான்” ஆயிற்று அதாவது கடவுளுக்குக் காணிக்கையாயிற்று” என்றால், அதன்பின் அவர் தம் தாய் தந்தைக்கு எந்த உதவியும் செய்ய நீங்கள் அனுமதிப்பதில்லை.இவ்வாறு நீங்கள் பெற்றுக் கொண்ட மரபின் பொருட்டுக் கடவுளின் வார்த்தையைப் பயனற்றதாக்கி விடுகிறீர்கள். இதுபோல நீங்கள் பலவற்றைச் செய்கிறீர்கள்” என்று அவர்களிடம் கூறினார்.

**தியானம்:** கடவுள் இவ்வுலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் படைத்து அவை அனைத்தும் ‘நல்லது’ என்று கண்டார். எனினும், இவை அனைத்தையும் தம் சார்பில் ஆண்டு நடாத்த தகுதியான ஒரு படைப்பை உருவாக்க எண்ணி, தம் சாயலில் மனிதனைப் படைத்தார் என இன்றைய முதல் வாசகத்தில் வாசிக்கின்றோம். கடவுளின் ‘சாயல்’ என்பதற்கு ‘அன்பின் சாயல்’ என்பது பொருள். மண்ணிலிருந்து அவனது உடலை உருவாக்கி, அதற்குள் தமது அன்பின் ஆவியை ஊதி அவனுக்கு உயிர் கொடுத்தார். அவன் தனியாய் இருப்பது நல்லதல்ல என்று எண்ணி அவனுக்குத் தக்க துணையையும் கொடுத்தார். அத்தோடுகூட அவனுக்குச் சுதந்திரத்தையும் கொடுத்தார். ஆனால், அன்று அவன் எடுத்த முடிவுதான் இன்று நம்மை பல வழிகளிலும் அடிமைகளாக்கி அலைய விட்டிருக்கிறது என்றால் அது மிகையாகாது. “உலகின் முதல் மொழி தமிழ் மொழி” என்று பல ஆராய்சிகள் கூறுவதாக ஊடகங்கள் வழியாக அறிந்து அவற்றை லைக் செய்கின்றோமே. அதையிட்டு நாம் பெருமை கொள்வது தகுதியானதே. ஆனால், இன்று தமிழன் தனக்கென்று ஒரு நாடு இன்றி அகதியாக அலைவதைப் பார்க்கும்போது, நமது மரபின் பொருட்டுக் கடவுளின் வார்த்தைகளை நாம் பயனற்றதாக்கி விட்டோமோ? சிந்திப்போம்.
நமது மரபு எது? சாதி பேதங்களா? பதவிக்கும், பகட்டுக்கும் முந்தியடிப்பதும், அதற்காக மற்றவர்களைப் புறக்கணிப்பதும், பிளவுகளை, பிரிவுகளைத் தோற்றுவிப்பதுமா? இவ்வாறு கடவுள் நமக்கு அளித்த அன்பான, சுதந்திமான ஆவியை ஊனமாக்கிவிட்டு, நம் இச்சைகளை நிறைவேற்ற அரங்கங்களில் அரசியல் வாதிகளுக்குப் பொன்னாடை போர்த்தும் செயற்பாடுகள் கூட இன்று நமது ‘மரபு’ ஆகிவிட்டதோ என எண்ணத் தோன்றுகின்றது. அரசியல் என்னும் சாக்கடையல்ல, ஆன்மீகம் என்னும் அருமருந்து ஒன்றே நம் இனத்திற்கு விடுதலை தரமுடியும். சிந்தித்து செயற்படுவோம்.